1970 ஜனவரி 27]

தேவக்கோட்டையிலுள்ள கிரிமினல் கோர்ட்டுகள் மாற்றம்

* வினா 85. திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தேவக்கோட்டையிலுள்ள கிரிமினல் கோர்ட்டுகளைச் சிவகங்கைக்கு மாற்ற அரசு எண்ணியுள்ளதா?-

(இ) இதனை ஆட்சேபித்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் அரசுக்கு எழுதியுள்ளனரா?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு கொண்டுள்ள முடிவு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பொதுவாக அநேக இடங்களில் கிரிமினல் கோர்ட் ஒரு பக்கமும், சிவில் கோர்ட் ஒரு பக்கமும் இருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் அப்படி இருக்கிறது என்பதை "பார் அசோசியேஷன்" தெரியப்படுத்தி ஒரே காம்பவுண்டுக்குள் சிவில் கோர்ட்டையும், கிரிமினல் கோர்ட்டையும் ஏற்படுத்த வேண்டுமென்று கோரியிருக்கிறது. இதைக் கவனித்துப் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு ஊரிலுள்ள கோர்ட்டை இன்னொரு ஊருக்கு மாற்றுவது பற்றிய கேள்வி இது. கனம் உறுப்பினர் கேட்பது ஒரே ஊரில் இடவசதி ஏற்படுத்தித் தருவது பற்றியது. வசதியுள்ள இடங்களில் அப்படித்தான் இருந்து வருகின்றன.

திரு. பெ. மலைச்சாமி : முகவை மாவட்டத்தில் நீதிமன்றங்கள் சிதறிக் கிடப்பதற்குக் காரணம், அம்மாவட்டத்திற்குத் தலைநகரும், தலைமையிடமும் இல்லாததுதான் என்று கூறப்படுகிறதே, அதற்காகத் தலைமையிடத்தையும், தலைநகரையும் அரசு தேர்ந்தெடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ரெவின்யூத் துறை அதை முடிவு செய்யவேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஓரிடத்தில் முன்சீப் கோர்ட் இருக்கும். இன்னொரு இடத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கும். சோளிங்கபுரத்தில் முன்சீப் கோர்ட் இருக்கிறது. அரக்கோணத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது. அமைச்சர் அவர்களுடைய தொகுதியில் கூட அப்படி இருப்பதாகச் சொன்ன ஞாபகம். எல்லாவற்றையும் ஓரிடத்திற்குக் கொண்டுவர பரிசீலனை செய்யப்படும் என்று முன்பு சொன்னார்கள். இப்போது அப்படி மாறுதல் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிரிமினல், சிவில் வழக்குகள் எந்த எந்தப் பகுதிகளில் அதிகம் வருகின்றன என்று பார்த்தே உயர் நீதிமன்றம் கோர்ட்டுகளை அந்த அந்தப் பகுதியில் திறக்கின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்தில என்ன நோக்கத்தில் அது ஓரிடம், இது ஓரிடம் என்று அமைத்தார்கள் என்பது தெரியாது. நாம் பொறுப்பேற்றவுடன் இதுபற்றி ஒரு முடிவு எடுத்து உயர்நீதிமன்றத்திற்குச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் பெரிய அதிகாரி ஒருவரை நியமித்து எப்படி எப்படி நீதிமன்றங்களை மாற்றி அமைக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்கிறார்கள். அவர்களது முடிவு தெரிந்த பிறகு நாம் ஒரு முடிவு செய்யலாம்.

தாலுக்காவுக்கு ஒரு வேலை வாய்ப்பகம்

* **வினா. 86.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு தொழிலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தாலுக்காக்கள் தோறும் வேலை தேடித்தரும் நிலையங்கள் (Employment Exchanges) அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தாலுக்காக்கள் அளவில் இல்லாவிட்டாலும் அங்கங்கே பஞ்சாயத்து யூனியன்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய யூனியன் அளவிலாவது ஏற்படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேலை தேடித்தரும் நிலையங்கள் மாவட்ட அளவில் பணியாற்றி வருகின்றன. ஊராட்சி மன்றங்கள் தங்களுக்குத் தேவையான ஆட்களை இவர்களிடம் கேட்கிறார்கள். இவர்கள் அனுப்பி வருகிறார்கள். வேலை தேடித்தரும் நிலையங்களை விரிவுபடுத்துவதற்குப் பதிலாக வேலை வாய்ப்புகளைத் தோற்றுவித்தால் நம் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : வேலை தேடித்தரும் நிலையங்கள் ஒரு வேலைக்கு ஆட்களை அனுப்புகிறார்கள். அவர்கள் போய் வேலையை அந்த இடத்தில் ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு மாதத்தில் அந்த தற்காலிக வேலை முடிவு அடைகிறது. திரும்பவும் இவர்கள் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்துகொள்கிறார்கள். இதே இடத்தில் மீண்டும் வேலை காலி ஏற்பட்டால் புதியதாக ஆளை எடுக்கிறார்களே தவிர முன்பு வேலை செய்தவர்களை அழைப்பது கிடையாது. தற்காலிகமாக ஒருவர் நியமிக்கப்பட்டால் அவருக்கு நிரந்தர வேலை கிடைக்கிற வரை தற்காலிக வேலை காலி ஏற்படுகிற போதெல்லாம் அவரையே அழைக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?